பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 04 சனிக்கிழமை 17.04.2021 கதிர் 31

## குடும்பஸ்தர் படுகொலை!

கிளிநொச்சியில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவ புரம் பகுதியில் குறித்த சம்பவம் புத்தாண்டு தினமான கடந்த 14ஆம் திகதி இடம்பெற் றுள்ளது.

தாக்குதலுக்குள்ளான ☞2

# ‘சின்னக் கலைவாணர்’ விவேக் காலமானார்!

### பேரதிர்ச்சியில் தமிழ்த் திரையுலகம்



மக்களைச் சிரிப்போடு சிந்திக்கவும் வைத்ததால் ‘சின்னக் கலை வாணர்’ என அழைக்கப்பட்ட தமிழ்த் திரையுலக நகைச்சுவை நடிகர் விவேக் (வயது 59) இன்று அதிகாலை காலமானார்.

விவேகானந்தன் என்ற இயற்பெயர் கொண்ட விவேக், திரை யுலகில் விவேகம் மிக்க நகைச்சுவையால் தனித்தன்மையோடு மிளிர்ந்தவர். துணை நடிகராக அறிமுகமாகி, சிரிக்க வைக்கும் திற னால் வளர்ந்து, ஒரே ஆண்டில் சுமார் 20 படங்களில் நடிக்கும் அள வுக்கு மிகவும் பிசியான காமெடி நடிகராக திகழ்ந்தவர். ☞2

## விவேக்கின் இறுதிக் கிரியை காவல்துறை மரியாதையுடன்

### தமிழக அரசு அறிவிப்பு



மறைந்த நடிகர் விவேக்கின் இறுதிக் கிரியை காவல்துறை மரி யாதையுடன் நடைபெறும் என்று தமிழக அரசு அறி வித்துள்ளது.

நடிகர் விவேக்கின் உடலைஅரசமரியாதையு டன் தகனம் செய்ய அனு மதி கோரி, தமிழக அரசு தேர்தல் ஆணையத்துக் குக் கடிதம் ☞2

# புலிகளை மீளுருவாக்க முயற்சியாம் வடக்கில் ஐவரை கைது செய்த ரி.ஐ.டி.

### கொழும்பில் தடுத்துவைத்து விசாரிக்க முடிவு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை மீளுருவாக்கும் நோக்குடன் குழுக்களை அமைத்துச் செயற்பட்டனர் என்ற சந்தேகத் தின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு பேர், புதுக்குடியிருப்பில் ஒரு வர் என ஐவர் பயங்கரவாதத் தடுப்பு விசார ணைப் பிரிவினரால்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இளவாலை பொலிஸ் பிரிவில் இருவரும், கோப்பாய், பலாலி மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுகளில் தலா ஒருவரும் என ஐவர் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள் ளனர். ஐவரும்மேலதிகவிசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவார் கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## ஜனாதிபதியால் உயிர் அச்சுறுத்தல்; எனது பாதுகாப்பைப் பலப்படுத்துக!

### பொலிஸ்மா அதிபருக்கு விஜேதாஸ எம்.பி. கடிதம்



ஆளும் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ, தனது பாதுகாப் பைப் பலப்படுத்தக் கோரி பொலிஸ்மா அதிபருக்கு இன்று கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அரசின் முறைகேடுகள் தொடர்பாக கருத்து வெளியிட் டதால், ஜனாதிபதி தன்னை அச்சுறுத்தியுள்ளார் எனவும் விஜேதாஸ எம்.பி. கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ☞2

## கொழும்புத் துறைமுக நகரம் சீனாவின் தீவாக மாறாதாம்!

### உறுதிபடக் கூறுகின்றது அரசு



கொழும்புத் துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக் குழு சட்டமூலம் ஊடாக மேற் கொள்ளப்படவுள்ள மாற்றங்க ளால் இலங்கைக்குள் மற்றுமொரு தனி நாடு உருவாகாது.

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். ☞2

## வடமராட்சியில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களுக்கு மறியல்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வடமராட்சி - முள்ளிப் பகுதி யில் விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இரு வரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கு மாறு பருத்தித்துறை பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தி யசாலையில் காயமடைந்த இருவ ரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களுடன் காணொளித் தொடர் புத் தொழில்நுட்பம் மூலம் விசா ரணை மேற்கொண்ட பதில் நீதி வான், இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் விளக்கமறி யலில் வைக்குமாறு உத்தரவிட்டுள் ளார்.

காயமடைந்தவர்களில் ஒருவர் அதி தீவிர சிகிச்சைப் ☞2

## யாழில் கொரோனாவால் மேலும் ஒருவர் மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)

கொரோனா வைரஸ் தொற்றால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் இன்று சாவடைந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டிருந்த புன்னாலைக்கட்டுவன் கிராமத்தைச் சேர்ந்த 65 வயது பெண்ணே உயிரிழந்தார்.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் உறுதிப் படுத்தினார்.

## எரிவாயு விலை உயர வாய்ப்பு

எதிர்வரும் மே மாதம ளவில் சமையல் எரிவாயு வின் விலை 195 ரூபா முதல் 200 ரூபா வரையில் அதி கரிக்கக்கூடும் என அரச வட் டாரத் தகவல்கள் தெரிவித் துள்ளன.

12.5 கிலோ கிராம் நிறை யுள்ள லிட்ரோ நிறுவனத்தின் சமையல் எரிவாயு சிலிண்ட ரின் விலை 700 ☞2

# சமவாய்ப்பை மறுக்கும் ‘போர்ட் சிட்டி’ சட்டமூலம்

### சஜித் அணி குற்றச்சாட்டு

கொழும்புத் துறைமுக நகரத்தை நிர் வகிப்பதற்கான ஆணைக்குழு சட்டமூலம் வெளிநாடுகளில் கறுப்புப் பணத்தை சேமிக்காத இலங்கையர்களுக்கு சம வாய்ப்பை மறுக்கின்றது என ஐக்கிய மக் கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுக நகர பொருளா தார ஆணைக்குழு தொடர்பாக அரசு முன்வைத்துள்ள சட்டமூலத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

குறித்த சட்டமூலம் போர்ட் சிட்டி ஆணைக்குழுவுக்கு அளவுக்கு ☞2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கொழும்புத் துறைமுக நகரம் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் நிறைவேறினால் இலங்கை சீனாவின் கொலணியாக மாறிவிடும் எனவும், தனி நாடு உருவாகும் எனவும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கொழும்புத் துறைமுக நகர் வேலைத் திட்டம் குறித்து நாம் மேற்கொள்ளவுள்ள மாற்றங்களால் இலங்கைக்குள் தனி நாடு நிர்மாணமாகாது. இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்கள், கொழும்புத் துறைமுக நகரில் முதலிடும் தரப்புக்குப் பொருந்தாது எனக் கூறப்படுவதும் பொய். அவ்வாறு இந்த அரசு செயற்படாது.

அத்துடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பகுதி சீனாவின் தீவாக மாற்றம் பெறாது. அதேபோல் சீனாவுக்கு மட்டும் முதலீடு வாய்ப்பு வழங்கப்படவில்லை. எனவே, இவ்விடயத்தில் நாட்டின் அரசமைப்பு, சட்ட கட்டமைப்பு, சுயாதீனம், ஒருமைப்பாட்டுக்கு எதிராக நாம் செயற்படவில்லை. செயற்படப் போவதும் இல்லை - என்றார்.

## ஜனாதிபதியால் உயிர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசி உரையாடலில் பயன்படுத்திய தொனி, தனக்கும் குடும்பத்துக்கும் உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தனது பாதுகாப்பை அதிகரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

## வடமராட்சியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவிலேயே தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இருவரும் சட்டவிரோத மண் கடத்தல்காரர்கள் என்றும், பொலிஸாரின் உத்தரவை மீறிச் செயற்பட்டதால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினார்கள் என்றும், அவர்கள் பயணித்த மண் கடத்தல் வாகனம் அவர்களின் சொந்த இடமான துன்னாலையில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## எரிவாயு விலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவாலும், லாப் நிறுவனத்தின் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 655 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபையிடம் அனுமதி கேட்டுக் கொண்டுள்ளதாக அந்த நிறுவனங்கள் தெரிவித்தன.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதுடன் அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் தமது நிறுவனங்களுக்குப் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது எனவும், ஆகவே, தற்போது காணப்படும் விலையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை தொடர்ந்தும் விற்பனை செய்ய முடியாது எனவும் அந்த நிறுவனங்கள் அரசிடம் அறிவித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கு நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளபோதிலும் அது தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை. - என்று கூறியுள்ளார்.

## சமவாய்ப்பை மறுக்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமான அதிகாரத்தை வழங்கியுள்ளது எனவும் எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

போர்ட் சிட்டி ஆணைக்குழுவுக்கு வெளிநாட்டவர்கள் நியமிக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளதால், மக்களின் தலைவிதி வெளிநாட்டவர்களால் தீர்மானிக்கப்படும் நிலை உருவாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சட்ட செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜேகுணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை நன்மை அடையக்கூடிய திட்டமாக போர்ட் சிட்டி கருதப்பட்டாலும், இந்தச் சட்டமூலம் நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உயர்நீதிமன்றத்தில் இரண்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## புலிகளை மீளுருவாக்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் இந்தியாவில் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டவர்களுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே குறித்த ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

## விவேக்கின் இறுதிக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பியிருந்தது.

இதனைத் தொடர்ந்தே, விவேக்கின் இறுதிக் கிரியை காவல்துறை மரியாதையுடன் மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் தற்போது தேர்தல் விதிகள் அமுலில் உள்ளதால், அரசு தேர்தல் ஆணையத்திடம் அனுமதி கோரியிருந்தது.

இன்று மாலை விவேக்கின் உடல் காவல்துறை மரியாதையுடன், துப்பாக்கி குண்டுகள் முழங்க, தகனம் செய்யப்படவுள்ளது.

அவரின் கலை மற்றும் சமூக சேவையை கௌரவிக்கும் முகமாகவே காவல்துறை மரியாதை செலுத்தப்படவுள்ளது.

விவேக்கின் உடல் விருகம்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

திரைப் பிரபலங்களும், அரசியல் தலைவர்களும், ரசிகர்களும், அவரின் நண்பர்களும் அவருக்கு நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நடிகர் விவேக்கின் உடல் இன்று மாலை விருகம்பாக்கம் மின் தகன மேடையில் தகனம் செய்யப்படும் என்று அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நடிகர் விவேக் மறைவுக்கு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

நடிகர் விவேக்கின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. தனது ஈடு இணையற்ற கலை சேவையாலும், சமூக சேவையாலும் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்தவர் நடிகர் விவேக் என்று முதலமைச்சர் பழனிசாமி கூறியுள்ளார்.

சின்ன கலைவாணர் நடிகர் விவேக் மறைவு செய்தி அறிந்து வேதனையடைந்தேன். 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் திரையுலகில் சிறந்த நடிகராக தன் ஆளுமையை கோலோச்சியவர். எண்ணற்ற படங்களில் விவேக் நடிப்பு சிரிக்க வைத்ததோடு மட்டுமன்றி சிந்திக்கவும் வைத்தது.

தமிழகத்திற்கு பெருமை சேர்த்த விவேக்கின் மறைவு, திரைத்துறைக்கும் ரசிகர்களுக்கும் பேரிழப்பு. கலைச் சேவையாலும், சமூக சேவையாலும் பெருமை சேர்த்த விவேக்கின் மறைவு மிகப்பெரிய இழப்பு. நடிகர் விவேக்கின் இடத்தை இனி எவராலும் நிரப்ப முடியாது என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சின்னக் கலைவாணர் எனத் திரையுலகில் புகழ்பெற்ற நகைச்சுவைக் கலைஞர் விவேக் மறைவு பேரதிர்ச்சி அளிக்கின்றது. பத்மஸ்ரீ விருது பெற்ற பெருமைக்குரியவர், கருணாநிதியிடம் தனி அன்பு கொண்டவர் நடிகர் விவேக் என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

## 'சின்னக் கலைவாணர்' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிமுக கதாநாயகர்கள் தொடங்கி, முன்னணி கதாநாயகர்கள் வரை விவேக்கின் நகைச்சுவை திரைப்படத்தின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பு செய்த காலம் தான், திரையுலகில் அவரது உச்சம்

நகைச்சுவை மூலம் இலஞ்சம், ஊழல், சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை, சமூக சீரழிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியதால், அவருக்கு 'சின்னக் கலைவாணர்' என்ற அன்புப் பட்டம் வழங்கப்பட்டது. தமிழ் சினிமாவில் இதுவரை 220 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து முத்திரை பதித்துள்ளார். அதேபோல், மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் மீது கொண்ட பற்றின் காரணமாக அவரது கருத்துகளை மாணவர்களிடையே கொண்டு செல்வதில் முக்கியப் பங்காற்றியவர். மேடைகள் தோறும் கலாமின் கருத்துகளைப் பேசி மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். சுற்றுச்சூழல் தொடர்பாகவும் அமைப்புகளை வைத்து மரம் நடுதல் போன்றவற்றை ஊக்குவித்தவர் விவேக். இதுவரை 33 லட்சத்துக்கும் அதிகமான மரக்கன்றுகளை நட்டுள்ளார். அதேபோல் கிராமங்கள் தோறும் மரம் நடும் இளைஞர்களை ஊக்குவித்தும் வந்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு விவேக்கின் 13 வயது மகன் பிரசன்னா குமார் அகால மரணமடைந்தது, அவரது வாழ்வின் பெருந்துயரமாக அமைந்துவிட்டது. கடைசியாக அவர் 2020ஆம் ஆண்டில் தாராள பிரபு என்ற படத்தில் நடித்திருந்தார். நேற்று முற்பகலில் சென்னை சாலிக்கிராமத்தில் உள்ள தமது வீட்டில் விவேக் இருந்தபோது மூச்சுத்திணறல், மயக்கம் ஏற்பட்டு, வடபழனியில் உள்ள சிம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மிகக்கடுமையான மாரடைப்பால் விவேக் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்து சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன. இதயம், நுரையீரலின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் எக்மோ கருவி மூலமும் விவேக்குக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. முதல் நாள் வரை நல்ல உடல்நலத்தோடு காணப்பட்ட விவேக், திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட செய்தி, தமிழகத்துக்கே அதிர்ச்சியான செய்தியாகவே அமைந்தது.

இந்நிலையில், தமிழ்த் திரையுலக ரசிகர்களைப் பேரதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டு, இன்று அதிகாலை 4.35 மணியளவில் நடிகர் விவேக் காலமானார். 59 வயதில் காலமான அவருக்கு அரசியல் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள், சமூக ஆர்வலர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## குடும்பஸ்தர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 42 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான மாயழகு மனோகரன் என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேரினவாதமே தேசபக்தி

இலங்கை அரசியலில் மிக முக்கியமான விடயத்தை வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் எடுத்துரைத்திருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

“பௌத்த தேரர்கள் பலரிடம் பேரினவாதம் மட்டுமே இருக்கின்றது. அவர்கள் சிறுபான்மை மக்களுக்கு எதிராகத் தமது பேரினவாதத்தைப் புதிய வடிவத்தில் சித்திரிக்கின்றார்கள். தமிழ், முஸ்லிம் அடிப்படைவாதம் பற்றிப் பேசும் இவர்கள் தமது அடிப்படை வாத இனவாதத்தை தேச பக்தியாகக் காட்டுகின்றார்கள்” என்றுரைத்திருக்கின்றார் மனோ கணேசன்.

தென்னிலங்கையின் மனோ நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டும் கருத்து இது.

பேரினவாதமே தேச பக்தியாகக் கொள்ளும் ஒரு குரூர அரசியல் கட்டமைப்பில் இந்தத் தேசம் சிக்கிக் கிடக்கின்றது.

பெங்கமுவ நாலக தேரர், அஸ்கிரிய அநுநாயக தம்மானந்ததேரர், ரத்னசார தேரர், முருத்தெட்டுவே ஆனந்த தேரர், சிங்கள ராவய தேரர்கள், ஞானசார தேரர், ராவணபலய தேரர்கள் போன்ற – மனோ கணேசன் எம்.பி. பட்டியலிடுகின்ற – பௌத்த துறவிகள் மட்டுமல்லர், முக்கிய தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் பேரினவாதமே நாட்டின் தேச பக்தி என்ற முரட்டுத்தனமான கொள்கை நிலைப்பாட்டை முழு அளவில் செயற்படுத்தவே முனைகின்றனர்.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் அந்த வரிசையில் முன் நின்றாலும், இந்த ஆட்சிப் பீடத்தின் முன்வரிசைத் தலைவர்கள் பலரினதும் ஆசியும், ஒத்துழைப்பும் இந்தப் பேரினவாதமே தேச பக்தி என்ற சிங்களத் தேசிய நிலைப்பாட்டுக்கு முழு அளவில் உண்டு என்பதையும் நாம் மறந்து விட முடியாது.

தென்னிலங்கை அரசியலில், மக்களை உணர்ச்சியூட்டி, விரைவில் ஆட்சிப் பீடத்தை – அதிகாரத்தை – கைப்பற்றுவதற்கான இலகு வழி பேரினவாதக் கிளர்ச்சிதான்.

அதனால்தான், கடைகெட்ட அரசியல்வாதிகள் எல்லோரும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற இந்தக் குறுக்கு வழியை நாடுகின்றார்கள்.

ஆனால், இது மிக ஆபத்தான வழிமுறை – நாட்டுக்கு மட்டுமல்ல, அந்தப் பேரினவாதத்தை வளர்த்து விடும் தலைவர்களுக்கும் கூட என்பதை சம்பந்தப்பட்டோர் மறந்து விடுகின்றார்கள். அல்லது ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும் என்ற அவர்களின் மனவெறி, இந்த யதார்த்தப் புறநிலையை அவர்கள் மனதில் அழுத்திப் பதிந்து உறைக்க வைக்கத் தவறி விடுகின்றது.

இனவாதத்தைக் கிளப்பி விடுவது என்பது ஆபத்தான பூதத்தை உசுப்பி விடுவதற்கு ஒப்பானது. அந்தப் பூதம் வளர்த்த கடா மார்பில் பாய்வது போல பாயக் கூடிய தீய எண்ணம் கொண்டது.

அந்த வரலாற்றுப் படிப்பினையைத்தான் சுதந்திர இலங்கையில் முதல் முறையாக குறுக்கு வழியில் – குறுகிய காலத்தில் – அதிகாரத்தைப் பிடிப்பதற்கு பேரினவாதத்தைக் கையில் எடுத்த எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா அனுபவிக்க வேண்டியவரானார்.

இந்த நாட்டில் நீதி, நியாயமான ஓர் அரசியல் கட்டமைப்பு நிலைநிறுத்தப்பட வேண்டுமானால் சமஷ்டி ஆட்சி முறையே அதற்கு ஒரே வழி என்று 1925 – 1930 களிலே தீவிரமாகப் பிரசாரம் செய்தவர் பண்டாரநாயக்கா. ஆனால் ஐம்பதுகளில் ஆட்சி அதிகாரத்தை குறுக்கு வழியில் கைப்பற்றுவதற்காக பேரினவாத வெறியைப் பிரதிபலிக்கும் ‘24 மணி நேரத்தில் தனிச் சிங்களச் சட்டம்’ என்ற இனவெறிக் கோஷத்தை முன்வைத்தார். எதிர்பார்த்த அரசியல் லாபத்தை – பலனை – அது ஈட்டிக் கொடுத்தது. ஆனால் பேரினவாதத்தைத் தேசபக்தியாகக் காட்டும் மிக மோசமான – பின்னடைவான – அயோக்கியத்தனமான – அந்தக் கொள்கைப் போக்கு நாட்டுக்கு எவ்வளவு பாதிப்பானது என்பதை உணர்ந்து, அதினின்றும், விடுபடுவது குறித்து அவர் சிந்திக்கத் தலைப்பட்டார்.

பேரினவாத வெறியைத் தூண்டி, அதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய அவர், அதிலிருந்து விடுபட முயன்ற போது பேரினவாதம் அவர் கையை விட்டு விலக மறுத்து விட்டது. வெள்ளத்தில் அள்ளுப்பட்டுவன் துணி மூடை என்று எண்ணிக் கரடியைப் பற்றிய கதை மாதிரியானது பண்டாரநாயக்காவின் நிலைமை.

கடைசியில் அவர் வளர்த்த கடா அவர் மார்பில் பாய்ந்தது. பேரினவாத வெறியின் பிரதிபலிப்பாக காவி உடை தரித்த பேரினவாத பிக்குவே அவரைச் சுட்டுக் கொன்றார்.

பௌத்த சிங்களப் பேரினவாத வெறியை அரசமைப்பிலும் பொறித்து, அதையே தேச பக்தியாக அர்த்தப்படுத்தும் அயோக்கியத்தனம் ராஜபக்ஷக்களின் அதிகாரத்திலும் கொடி கட்டிப் பறக்கின்றது. அந்த நிலைப்பாட்டின் விபரீத விளைவுகளை நாடும், தலைவர்களும் சந்திக்க வேண்டியிருப்பது தவிர்க்க முடியாததாக அமையும்.

# இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்கல் தொடர்பில் டக்ளஸ் மறுதரம் சிந்திப்பது நல்லது

## புளொட் தலைவர் சித்தார்த்தன் ’அட்வைஸ்’



இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவருக்கு அனுமதி வழங்கும் செயற்பாடு தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மறுதரம் சிந்திப்பது நல்லவிடயம். அந்த விடயத்தில் அவர் அக்கறை கொண்டுள்ளமையால் அந்த சிந்தனையை நடைமுறைப்படுத்துவார் என்று நம்பவில்லை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவித்தார். வவுனியாவிற்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் செய்த அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

இந்தியமீனவர் விடயத்தில் கட்டணம் அறவிட்டு, அதனை எமது மீனவர்களுக்கு வழங்கலாம் என்று கடற்றொழில் அமைச்சர் சொல்லியிருக்கின்றார். அது எமது மீனவர்களைப் பாதிக்கும் ஒரு விடயமே. அதற்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு இருக்கின்றது.

எனினும் அதனை ஒரு சிந்தனையாக சொல்லியிருப்பதாகவும் திட்டமாகச் சொல்லவில்லை என்றும் கடற்தொழில் அமைச்சர் கூறியிருக்கின்றார். குறிப்பாக மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் இந்திய முதலாளிகள் எவ்வளவு பணத்தை வழங்கியும் அந்த அனுமதியைப் பெறுவார்கள். இதனால் ஏழை கடற்தொழிலாளர்கள் நன்மையடைய மாட்டார்கள்.

வாழ்வாதாரம் என்பது தொப்புள்கொடி மற்றும் தமிழ் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது. இந்தியாவைப் பொறுத்தவரை கடற்தொழிலில் அதிகம் ஈடுபடுபவர்கள் பெரிய முதலாளிகளின் கீழே வேலை செய்யும் தொழிலாளிகளாக இருக்கின்றனர். அவர்களுக்கு அந்தத் தொழிலே மூலாதாரமாகவுள்ளது.

யாராக இருந்தாலும் தமது வாழ்வாதாரத்தைப் பார்க்கவே முயற்சிசெய்வர். எனவே அந்த விடயத்தை விரைவில் பேசித் தீர்ப்பதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். – என்றார்.

# இந்திய இராணுவம் பயன்படுத்துகின்ற கைக்குண்டுகள் வவுனியாவில் மீட்பு



இந்திய இராணுவத்தால் பயன்படுத்தப்படுபவை எனக் கூறப்படும் இரு கைக்குண்டுகள் செயலிழந்த நிலையில் வவுனியாவில் மீட்கப்பட்டுள்ளன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரப்பெரியகுளம், நவகமுவ பகுதியில் வைத்து இந்த இரு கைக்குண்டுகளும் வெள்ளி மாலை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் மழை காரணமாக மண் அரித்துச் செல்லப்பட்ட இடத்தில் சந்தேகத்திற்கிடமான பொருள் காணப்பட்டதையடுத்து ஈரப்பெரியகுளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மீட்கப்பட்ட இரு கைக்குண்டுகளும் இந்திய இராணுவத்தால் பயன்படுத்தப்படுகின்ற மில்ஸ் 36 வகையைச் சேர்ந்த கைக்குண்டுகள் எனவும், அவை செயலிழந்து காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

கைக்குண்டுகளை விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் அந்த பகுதியில் மேலும் வெடிபொருள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவைப் பெற்று தேடுதல் நடத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஆராய கட்சித் தலைவர்களின் கூட்டம் திங்கள்

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தெரிவுக்குழுவின் கூட்டம் கட்சித் தலைவர்களின் பங்குபற்றலுடன் நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாளை பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்ற வளாகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது என நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன்போது எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ள ஏப்ரல் மாதத்தின் இறுதி நாடாளுமன்ற வாரத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் பிரேரணைகள் மற்றும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்ற சட்ட மூலங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அரசியல் பழிவாங்கல் தொடர்பாக தேடிப்பார்க்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான யோசனைகள் எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவும் அதுதொடர்பான விவாதம் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடத்தவும் இதற்கு முன்னர் இடம்பெற்ற நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான கட்சித்தலைவர்கள் கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டிருந்தது. எனவே நாளைமறுதினம் திங்கட்கிழமை இடம்பெறும் கட்சிதலைவர்கள் கூட்டத்தின்போது இதுதொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என நாடாளுமன்ற செயலாளர்நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

# சித்திரைப் புத்தாண்டுக் காலப் பகுதியில் மக்களின் நடத்தை வேதனைக்குரியது

## சுதத் சமரவீர கவலை

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் பொதுமக்கள் நடந்து கொண்ட விதம் வருத்தமளிக்கின்றது என தலைமை தொற்றுநோயியல் நிபுணர் சுதத் சமரவீர கவலை வெளியிட்டுள்ளார்.

பொதுமக்களின் இந்த நடத்தைகளின் விளைவாக கடுமையான எதிர்மறையான தாக்கம் எதிர்காலத்தில் வெளிப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

சுகாதார ஆலோசனையைப் பொருட்படுத்தாமல் பொதுமக்கள் தற்போது பொறுப்பற்ற வாழ்க்கை முறையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் சுதத் சமரவீர சுட்டிக்காட்டினார்.

இந்த நிலைமை தொடர்ந்தால் சுகாதார விதிமுறைகளைக் கடுமையான முறையில் செயற்படுத்த வேண்டி ஏற்படும் என தலைமை தொற்றுநோயியல் நிபுணர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.

இதேவேளை தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்குவது தொடர்பான இறுதி முடிவை அடுத்த வாரம் சுகாதார அமைச்சு அறிவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசின் கொரோனா தடுப்பு நடவடிக்கை தொடர்பாக டுவிட்டரில் ராகுல் காந்தி கிண்டல்!



மத்திய அரசு கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ராகுல் காந்தி டுவிட்டரில் கிண்டல் செய்துள்ளார்.

'கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் வழி முறையின் முதல் நடவடிக்கை – முடக்கத்தை அமல்படுத்தியது, இரண்டாவது நடவடிக்கை – மணி ஓசை எழுப்பச் செய்தல், மூன்றாவ தாக கடவுளைத் துதி பாடுதல் என அவர் பதிவிட்டுள் ளார்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த மத்திய அரசு கையாண்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் டெல்லியை ஆண்ட துக்ளக் வம்சத் தைச் சேர்ந்த முகமது பின் துக்ளக் போன்று எதையும் திட்டமிடாமல், தன்னிச்சையாக இருப்பதாகவும் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

# மேற்கு வங்க 5 ஆம் கட்ட தேர்தல் வாக்குப்பதிவு இன்று நடைபெற்றது



மேற்கு வங்கத்தில் 5 ஆம் கட்ட தேர்தல் வாக்குப்பதிவு இன்று நடைபெற்றது. 294 தொகுதிகளைக் கொண்ட மேற்குவங்கள சட்டசபைக்கு 8 கட்டங்களாக தேர்தல் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே 135 தொகுதிகளுக்கு 4 கட்டங்களாக தேர்தல் நடைபெற்ற நிலையில், 5 ஆம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை தொடங்கி நடைபெற்றது.

319 வேட்பாளர்கள் போட்டியிடும் 5 ஆம் கட்டத் தேர் தலுக்காக 15,789 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட் டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் பலத்த பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, வாக்குப் பதிவு கொரோனா கட்டுப்பாடுகளுடன் காலை 7 மணிக்கு தொடங்கியது.

4ஆம் கட்ட வாக்குப் பதிவில் அதிக வன்முறைச் சம் பவங்கள் இடம்பெற்றதால் மீதி வாக்களிப்பினை ஒரே கட்டமாக நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை திரிணா முல் காங்கிரஸ் கட்சி எழுப்பியிருந்த நிலையில் இக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இன்றைய வாக்களிப்பிலும் ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெற் றுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வேளச்சேரி தொகுதியின் 92 ஆம் வாக்குச்சாவடியில் இன்று மறு வாக்குப்பதிவு



கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவடைந்த நிலை யில், வேளச்சேரி தொகுதியில் 2 வாக்குப்பதிவு இயந்திரங்களும், ஒரு வி.வி. பாட் இயந்திரமும் மோட்டார் சைக் கிளில் எடுத்துச் செல்லப்பட்டமை குறித்து அளிக்கப்பட்ட புகாரின் பேரில் விசார ணைகள் நடத்தப்பட்டன.

அவற்றின் முடிவில், 92 ஆவது வாக்களிப்பு மையத்தில் 50 நிமிடங் கள் பயன்படுத்தப்பட்ட நிலையில் கோளாறு ஏற்பட்ட வாக்கு இயந்திரத் தில் 15 வாக்குகள் பதிவாகி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த இயந்தியம் இரு சக்கர வாகனத்தில் எடுத்துச் செல் லப்பட்டமை உறுதியானதால், வேளச்சேரி 92 ஆவது எண் கொண்ட வாக்களிப்பு மையத்தில் மீண்டும் மறுவாக்குப்பதிவு செய்ய தேர்தல் ஆணையம் முடி வெடுத்தது.

அதன்படி அங்கு மீண்டும் தேர்தல் பரப்புரை நடைபெற்று, இன்று காலை முதல் மறு வாக்குப்பதிவு தொடங்கி நடை பெற்றுள்ளது.

# கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பாவுக்கு இரண்டாவது தடவையாகவும் கொரோனா



பெலகாவி மக்களவைத் தொகுதிக்கு இன்று இடைத் தேர்தல் நடைபெற்றது. இதை யொட்டி அந்தத் தொகுதியில் முதலமைச்சர் எடியூரப்பா பா.ஜனதா வேட்பாளரை ஆத ரித்துத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அவருக்கு காய்ச்சல் ஏற்பட் டதையடுத்து மருத்துவர்க ளின் மேற்பார்வையில் மாத் திரைகளை எடுத்துக்கொண்டு மீண்டும் பிரசாரத்தில் மும்முர மாக ஈடுபட்டார். அப்போது மறுபடியும் அவருக்கு காய்ச்சலும் சோர்வும் ஏபட்டதால் பிரசாரத்தை பாதியிலேயே முடித்துக் கொண்டு விடுதிக்குத் திரும்பினார் எனவும் சொல்லப்படுகிறது.

அவருக்கு கொரோனா பரிசோதனை நடத்தப்பட்ட போது, தொற்று உறுதியாகியுள்ளது. ஏற்கனவே ஒரு தடவை தொற்றுக்குள்ளாகி சிகிச்சை எடுத்துக்கொண்ட அவர், இரண்டாவது முறையாகவும் கொரோனாவால் பாதிக் கப்பட்டுள்ளார். கொரோனா பாதிப்பை தொடர்ந்து அவர் பெங்களூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



# ரபேல் போர் விமானங்களின் அடுத்த தொகுதி இம்மாதம் 21 ஆம் திகதி இந்தியாவுக்கு

பிரான்ஸ் நாட்டுக்கு விஜயம் மேற்கொள்ளும் இந்திய விமானப்படைத் தலைவர் ராகேஷ் படவுரியா ஏப்ரல் 21 ஆம் திகதி தென்மேற்கு பிரான்ஸில் உள்ள மெரிக்னாக் – போர்டோ விமான நிலையத்திலிருந்து ஆறு ரபேல் போர் விமானங்களை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்று இந்தியாவுக்கு அனுப்பி வைக்கவுள்ளார்.

அவை இந்தியா வந்து சேர்ந்த பின்னர், மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள ஹசிமரா விமானப்படைத் தளத்தில் நிலைப்படுத்தப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்திய விமானப்படையைப் பலப்படுத்துவதற்காக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த டசால்ட் நிறுவனத்திடம் இருந்து 36 அதிநவீன ரபேல் போர் விமானங்கள் 56 ஆயிரம் கோடி ரூபா செலவில் வாங்கப்படுவதற்கான. ஒப்பந்தம் 2016 இல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, ஏற்கனவே 11 ரபேல் விமானங்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டு, அவை தற்போது ஹரியானாவில் உள்ள அம்பாலா விமானப்படைத் தளத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. கிழக்கு லடாக்கில் சீனாவுடன் சமீபத்தில் போர் பதற்றம் ஏற்பட்டபோது, இந்த விமானங்கள் கண்காணிப்புக்காக பயன்படுத்தப்பட்டன.

தேவை

புதிதாக திறக்கப்படவுள்ள அசைவ உணவகத்துக்கு றைஸ், கொத்து மற்றும் உணவுகள் செய்யத் தெரிந்த முன் அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்பு:-0761239502

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

077 868 9500

# முகக் கவசம் அணியாவிட்டால் 10,000 ரூபா அபராதம்

## உத்தரப் பிரதேச முதல்வர் அதிரடி உத்தரவு



உத்தரப் பிரதேசத்தில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருவதால் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட் டுள்ளன.

உத்தரப் பிரதேசத்தில் நேற்று ஒரே நாளில் 20,510 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் 1.11 லட்சம் பேர் சிகிச்சையில் உள்ளனர். பள்ளிகள் மே 15 ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ளன. 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகள் தள்ளி வைக்கப்பட்டுள் ளன.

இந்த தற்காப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, மாநிலம் முழுவதும் வரும் ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் விலக்கு அளிக் கப்பட்டுள்ளது.

தினசரி தொற்று எண்ணிக்கை 2000இற் கும் அதிகமாக உள்ள 10 மாவட்டங்களில் இரவு 7 மணி முதல் காலை 8 மணி வரையிலான இரவு நேர ஊரடங்கு அமுலில் உள்ளது. லக்னோ, வாரணாசி, பிரயாக்ராஜ் போன்ற நகரங்களில் பாதிப்பு அதிகமாக உள்ளது என தரவுகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் முகக் கவசம் அணி யாமல் வெளியே பயணித்தால், பத்தா யிரம் ரூபா வரை அபராதம் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் முதல் முறை 1,000 ரூபாவும், இரண்டாவது முறை யும் அதே தவறைச் செய்தால் பத்தாயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்படும் என்றும் முதல்வர் யோகி ஆதித்யநாத் புதிய சட்ட நடைமுறைக்கான உத்த ரவை நேற்று பிறப்பித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் பழனிசாமி இரங்கல்



முதலமைச்சர் எடப்பாடி பழனி சாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தமிழ்த் திரையுல கினராலும், திரைப்பட ரசிகர்களாலும் சின்னக் கலைவாணர் என அழைக் கப்படும் விவேக் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த மன வேதனை அடைந்துள்ளேன் எனத் தெரிவித் துள் ளார்.

தன்னுடைய சொந்த வாழ்க் கையிலும் சமூக நலனைக் குறிக் கோளாகக் கொண்டு வாழ்ந்த சமூக ஆர்வலர், இளைஞர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர் விவேக் எனக் கூறியுள்ள முதலமைச்சர், நடிகர் விவேக்கின் இடத்தை இனி எவராலும் நிரப்ப முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நடிகர் விவேக் மறைவுக்கு பிரதமர் மோடி இரங்கல்



மறைந்த நடிகர் விவேக்கின் உடல் இன்று மாலை விருகம்பாக் கம் மின் தகன மேடையில் தகனம் செய்யப்படுகிறது என குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நடிகர் விவேக் மறைவிற்கு பிரதமர் மோடி இரங் கல் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

நடிகர் விவேக்கின் திடீர் மரணம் பலரை வேதனையடைய செய்துள்ளது. விவேக்கின் காமெடி நடிப்பும், வசன உச்சரிப்பும் மக்களை மகிழ்வித்தன. தனது படங்களிலும் நிஜ வாழ்க்கையிலும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் மீது அக்கறை காட்டியவர் நடிகர் விவேக் என்று பிரதமர் மோடி புகழாரம் சூட்டி உள்ளார்.

# மரணமே உனக்குச் சிரிக்கத் தெரியாது; அதனால்தான், சிரிப்பை திருடிவிட்டாய்!

## கவிஞர் வைரமுத்து



நகைச்சுவை நடிகர் விவேக் அவர்களின் மறைவுக்குப் பலரும் இரங்கல் தெரிவித்தும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியும் வருகின் றனர். இந்நிலையில் கவிஞர் வைரமுத்து நடிகர் விவேக்கிற்கு அஞ்சலி செலுத்திவிட்டு தனது துக்கத்தை செய்தியாளர்களிடம் பகிர்ந்து கொண்டார். அப்போது அவர், ஒரு சீர்திருத்தக் கலைஞன் மறைந்துவிட்டான் என்று சொல் வதா? என்னைப் பொறுத்தவரையில், ஒரு நல்ல சகோதரனை இழந்துவிட்டேன். என் கவி தைகளின் கொள்கைப் பரப்புச் செயலாளரை நான் இழந்துவிட்டேன். தமிழ்த் திரை உலகம் நீண்ட காலமாக சேமித்துவைத்திருந்த செல் வத்தை இழந்துவிட்டது. நகைச்சுவை நடிகர்கள் வருவார்கள், இருக்கிறார்கள். அவர்களில், விவேக் தனித் தடம் பதித்தவர். கொள்கை, சீர்தி ருத்தம், பகுத்தறிவு ஆகியவை இருக்க வேண் டும் என்று கலையில் தன்னைச் செதுக்கிக் கொண்டவர்.

இன்றைக்கு சாவின் விழியில் அவரது மரணம் கொண்டாடப்படுவதற்கு காரணம், அவரது கலைச் சேவை மட்டுமல்ல; அதைத் தாண்டி, அவரது சமூக அக்கறை. ஒரு கலைஞனுக்குத் தேவையான சமூக அக்க றையைத் தன் கலை வழியிலும், கலைக்கு வெளியிலும் அவர் பின்பற்றினார் என்பதுதான் விவேக்கின் தனிச்சிறப்பு. ரசிகர்கள் மட்டுமா துக்கம் கொண்டாடுகிறார்கள். கலை உலகம் மட்டுமா துக்கம் கொண்டாடுகிறது. மனிதர்கள் மட்டுமா இன்று துக்கம் அனுஷ்டிக்கிறார்கள்? இல்லை. விவேக் நட்ட மரங்களும், செடிகளும், கன்றுகளும் விவேக்கிற்காக கண்ணீர் சிந்து கின்றன எனச் சொல்ல வேண்டும்.

எனக்கும் அவருக்கும் நல்ல நட்பு உண்டு. என் கவிதைகளை எழுத்துகளை, என்னை, திரையில், திரைக்கு வெளியில் கொண்டாடியதில் அவருக்குப் பெரும் பங்குண்டு. அவரும் நானும் ஒரே வகுப்பில் யோகா பழகிக்கொண்டோம். ஓராண்டாக எனக்குப் பக்கத்தில் இருந்து அவர் யோகா கற்றுக்கொண்டார். இப்போது நான் தனியாக யோகா செய்கிறேன். என் பக்கத்து இடம் காலியாகிவிட்டது. நண்பர் விவேக் இவ் வளவு விரைவில், நம்மைவிட்டு போவார் என நான் கருதவில்லை.

59 வயது என்பது இளமை கனிந்த வயது. இனிமேல்தான் ஒருவன் சேவை செய்ய வேண்டிய வயது. பக்குவப்பட்ட வயது. கலை புரிகிற வயது. சமூகத்தை அறிகிற வயது. இந்த வயதில், மரணம் அவரைப் பிரித்துக் கொண்ட தில், எங்களுக்குச் சம்மதம் இல்லை. மரணமே உனக்குச் சிரிக்கத் தெரியாது. அதனால்தான், சிரிப்பைத் திருடிவிட்டாய். விவேக்கை கலைச் சரித்திரம் எப்படி எழுதும் என்று நான் நனைக்கிறேன், 'விவேக்' என்று பெயரைப் போட்டு, எதிர்கால கலைச் சரித்திரம், 'காமெடி கதாநாயகன்' எனக் கொண்டாடும். நீண்ட காலம் நினைக்கப்படுவார் என் அன்பு சகோதரர் விவேக் என்று தெரிவித்தார்.

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்



தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டா லின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், 'சின்னக் கலைவா ணர்' எனத் திரையுலகில் புகழ்பெற்ற நகைச்சுவைக் கலை ஞர் விவேக் மறைவுச் செய்தி பேரதிர்ச்சி அளிக்கின்றனது என தெரிவித்துள்ளார்.

பல்கலை வித்தகராக விளங் கிய விவேக் தனது தனித்துவ மான நடிப்பாற்றலால் நகைச் சுவையுடன் விழிப்புணர்வையும் மக்களுக்கு வழங்கியவர் எனக்கூறியுள்ள மு.க.ஸ்டாலின், இன்னும் பல சாதனைகளை நிறைவேற்றக்கூடிய ஆற்றல் படைத்த நடிகர் விவேக்கை இயற்கை இத்தனை அவசரமாக ஏன் பறித்துக் கொண்டதோ! என வேதனை தெரிவித்துள்ளார்.


# விவேக்கின் மறைவு பல கேள்விகளுக்கு இடமளிப்பதாகிவிட்டது: திருமாவளவன்



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திரு மாவளவன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், நடிகர் விவேக் அவர்களின் மறைவு மிகுந்த வேதனையளிக்கிறது. அவருடைய மறைவு பல கேள்விகளுக்கு இடமளிப்பதாக அமைந்துவிட்டது. தடுப்பூசி போட்டதற்குப் பின்னர்தான் அவர் சுயநினைவை இழந்தார் என்பது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை அரசு தெளிவுபடுத்த வேண்டும். அவருக்கு எமது அஞ்சலி எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நடிகர் விவேக், தன் திறமையால் சினிமாவை சிறப்படையச் செய்தவர்

## அமைச்சர் அமித் ஷா இரங்கல்



நடிகர் விவேக் மரணம் பற்றி அறிந்து வேதனையுற்றேன். அவரது நடிப்பின் அற்புத மான திறமை அவரை மிகச்சிறந்த நடிகராக் கியது.

தன் திறமையால் இந்திய சினிமாவை சிறப்ப டைய செய்தவர். அதற்காக எப்போதும் நினைவு கூறப்படுவார். அவரது குடும்பத்தினருக்கும் ரசிகர்களுக்கும் எனது இரங்கல். என்று அமைச் சர் அமித் ஷா தெரிவித்தார்



# விவேக்கின் மரணம் வேதனை தருகிறது!

## சுப.வீரபாண்டியன் இரங்கல்



திராவிட இயக்கத்தமிழர்பேரவையின் பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் தனது இரங்கல் செய்தியில், பகுத்தறிவுக் கருத்துகளைத் திரையில் பரப்பி வந்த நடிகர் சின்னக் கலைவாணர் விவேக்கின் மரணம் வேதனை தருகிறது. சுற்றுச் சூழலில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட ஒரு கலைஞனை நாடு இழந்து விட்டது. அவருக்கு நம் இறுதி வணக்கம்! இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் சென்ற படகு கவிழ்ந்து விபத்து துனிசியாவில் 41 பேர் பரிதாபமாக சாவு



உள்நாட்டுப் போர், பயங்கரவாதம், வறுமை உள்ளிட்ட காரணங்களால் ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளை சேர்ந்த மக்கள் அகதிகளாக கடலில் ஆபத்தான பயணம் மேற்கொண்டு ஐரோப்பிய நாடுகளில் சட்டவிரோதமாக நுழைந்து புகலிடம் தேடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த பயணத்தின் போது அகதிகள் செல்லும் படகுகள் விபத்தில் சிக்கி உயிரிழப்புகளும் ஏற்படுகிறன.

இந்நிலையில், வடக்கு ஆபிரிக்க நாடான துனிசியாவின் எஸ்பக்ஸ் நகரில் இருந்து ஐரோப்பிய நாடான இத்தாலியின் லம்பிடுசா தீவுகளுக்குள் நுழைந்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த அகதிகள் 40 இற்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் பயணத்தை தொடங்கினர். அவர்கள், சட்டவிரோதமாக மத்திய தரைக்கடலை கடக்கும் மிகவும் ஆபத்தான பயணம் மேற்கொண்டனர்.

ஆனால், அகதிகள் பயணித்த படகு மத்திய தரைக் கடலை நேற்று கடக்கும் போது திடீரென அலையில் சிக்கி விபத்துக்கு உள்ளானது. இந்த விபத்தால் படகு கடலில் மூழ்கியது. அந்த படகில் இருந்தவர்கள் அனைவரும் கடலில் மூழ்கினர்.

விபத்து குறித்து தகவலறிந்த துனிசியா கடற்படையினர் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்றனர். ஆனால், கடற்படையினர் வருவதற்குள் படகில் இருந்த அகதிகள் 41 பேரும் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 21 பேரின் உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளன. எஞ்சியோரின் உடல்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டதால் அவற்றை தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# ஹரிபோட்டர் திரைப்பட நடிகை புற்றுநோயால் மரணமடைந்தார்



உலக அளவில் மிகவும் புகழ்பெற்ற திரைப்படங்களில் ஹரிபோட்டர் திரைப் படம் முதன்மையானது. ஹரிபோட்டர் திரைப்படம் பல்வேறு தொகுப்புகளாக வெளிவந்துள்ளது.

ஹரிபோட்டர் திரைப்படத்தில் நாசிசா மல்போய் என்ற கதாப்பாத்திரத்தில் நடித்து புகழ்பெற்றவர் நடிகை ஹெலன் மெர்க்குரி. இங்கிலாந்து நாட்டை சேர்ந்த நடிகை ஹெலன் மெர்க்குரி ஜேம்ஸ்பாண்ட் திரைப்படமான ஸ்கைஃபால் திரைப்படத்திலும் நடித்துள்ளார். மேலும், ஃப்கி பிலிண்டர்ஸ் என்ற தொலைக்காட்சி தொடரிலும் நடித்துள்ளார்.

இதற்கிடையே, 52 வயதான நடிகை ஹெலன் மெர்க்குரிக்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் வீட்டிலேயே சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஹெலன் மெரிக்குரி நேற்று வீட்டிலேயே உயிரிழந்தார். அந்த தகவலை ஹெலன் மெரிக்குரியின் கணவரும் நடிகருமான டமியன் லிவிஸ் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். நடிகை ஹெலன் மெர்க்குரியின் உயிரிழப்பால் அவரது ரசிகர்கள் மிகுந்த அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# அத்தியாவசிய மருந்துகள் இல்லாமல் தவிக்கும் பிரேஸிலில் மருத்துவர்கள்; கொரோனா எதிரொலி



கொரோனாவின் பிடியில் சிக்கித்தவிக்கும் பிரேசிலில் மயக்க மருந்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என அந்நாட்டு சுகாதாரத்துறையினர் தெரிவிக்கின்றனர்.


உலக அளவில் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் ஒன்று பிரேஸில். அங்கு ஒரு கோடியே 37 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 3 லட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் ரியோ டி ஜெனிரோ மற்றும் சாவ் பாலோ நகரிலுள்ள மருத்துவமனைகளில் அத்தியாவசியமருந்துகளுக்குபற்றாக் குறைஏற்பட்டுள்ளது. குறிப்பாக நோயாளிகளுக்கு வழங்கப்படும் மயக்க மருந்துக்கு கடும் பற்றாக்குறை நிலவு கின்றது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

# கொரோனா காற்றில் பரவும் தன்மையுடையது

**லான்செட் மருத்துவ இதழ் புதிய ஆய்வு**

கொரோனா வைரஸ் காற்றில் பரவும் தன்மையுடையது என்று அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் உறுதியான சான்றுகள் கிடைத்திருப்பதாக லான்செட் மருத்துவ இதழ் தெரிவித்துள்ளது.



இந்த வைரஸ் காற்றில் பரவுவதால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் இதனை கருத்தில் கொண்டு புதிய முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆய்வாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் ஓர் அறைக்குள் இருக்கும் போது அதிகம் பரவுவதில்லை என்றும் பொதுவெளியில்தான் காற்றில் அதிகமாக வைரஸ் பரவுகிறது என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

# விண்ணில் சீறிப்பாய்ந்த அதி நவீன அமெரிக்கா உளவு விமானம் நடுவானில் வழிமறித்து திருப்பி அனுப்பிய ரஷ்ய போர் விமானம்

ரஷ்ய எல்லையையொட்டி, விண்ணில் பறந்த அமெரிக்காவின் உளவு விமானம் நடுவழியில் தடுத்து நிறுத்தப்பட்டு, திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.

Kamchatka என்ற துறைமுக நகர் அருகே பசுபிக் பெருங்கடல் மீது அமெரிக்காவின் போயிங் R.C.135 ஏன்ற அதி நவீன உளவு விமானம் பறந்து சென்றது.

நடுவானில் இந்த விமானத்தை ரஷ்யாவின் மிக் 31 ரக ஜெட் போர் விமானம் வழிமறித்து தடுத்து நிறுத்தியதாக அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதேநேரம், தங்கள் நாட்டு எல்லைக்குள் அமெரிக்க உளவு விமானம் நுழையவில்லை என ரஷ்யா அறிவித்துள்ளது.



# உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு குட் - பை சொல்லும் மலேசிய விவசாயிகள்



மலேசியாவில் முலாம்பழங்களை பயிர் செய்யும் விவசாயிகள், அவை செழிப்பாக வளர்வதற்கு புது யுதியை கையாளுகின்றனர்.

புட்ரஜாயா (PUTRAJAYA) நகரிலுள்ள பசுமை பண்ணைகளில் ஜப்பானிய மஸ்க் மெலன் எனப்படும் முலாம்பழங்கள் வளர்க்கப்படுகின்றன. அவை செழிப்பாக வளர, முலாம்பழங்களுக்கு மசாஜ் செய்வதுடன், பழங்களுக்கு மத்தியில் இசையை ஒலிக்கவைக்கின்றனர். இவ்வாறு எவ்வித உரமும், பூச்சிக்கொல்லி மருந்தும் இல்லாமல் வளரும் இந்த முலாம் பழங்களை பண்ணைக்கு வந்து வாங்குவதுடன் ஆன்லைனிலும் வாங்க ஆர்வம் காட்டுகின்றனர் என இளம் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர்களில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் கிண்ணியா நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு



இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்து வருகின்ற கட்சிகளிலும், ஆட்சியாளர்களிலும், மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

இன்று (17) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

அண்மைய காலங்களில் இலங்கையை ஆட்சி செய்யும் அரசாங்கங்களும் ஆட்சியாளர்களும் ஒருவரையொருவர் குற்றம்சாட்டுவதும் விமர்சனங்கள் செய்து வருவதும் பொதுமக்களிடையே ஒருவகை அச்சத்தையும் வெறுப்புணர்வையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

மத்திய வங்கி பிணை முறி மோசடி, சீனி இறக்குமதி மோசடி, வெளிநாடுகளுக்கு காணிகளை விற்பனை செய்தல், தேங்காய் எண்ணெய் இறக்குமதி, உர இறக்குமதி, அதிக கடன், பணவீக்கம், பொருளாதார வீழ்ச்சி, பண வீண்விரயம், காடழிப்பு, அண்மைய கைதுகள், ஊழல் மோசடி, சிறுபான்மையினர் மீதான அழுத்தங்கள் என ஒவ்வொரு தலைப்புகளிலும் இவர்களுக்கிடையே நடைபெறுகின்ற வாதப்பிரதி வாதங்கள், கேள்விகள், பத்திரிகை செய்திகள் எல்லாவற்றையும் அவதானிக்கின்ற போது ஏன் இவர்களுக்கு வாக்களித்து ஆட்சிபீடமேற்ற வேண்டும் என்றும் நாட்டின் தேசிய வருமானம், பொருளாதாரம் என்பவற்றை அழிக்க வேண்டும் என்றும் கேள்வியை எழுப்பிக் கொண்டிருக்கின்றது.

எனவே இந்நாட்டு மக்கள் சிறந்த பொருளாதாரக் கொள்கை, உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தல் ,கடன் சுமைகளை குறைத்தல், ஊழல் மோசடிகளை இல்லாமல் செய்தல் போன்ற நல்ல வேலைத் திட்டங்களையும் கொள்கைகளையும் கொண்ட மக்கள் விடுதலை முன்னணி போன்ற மூன்றாவது சக்தி ஒன்றை பலப்படுத்தி அவர்களிடம் இந்த நாட்டின் ஆட்சியை ஒப்படைப்பதன் மூலம் இந் நாட்டை மீட்டெடுத்து அபிவிருத்தி செய்வதாயின் பெரும்பான்மை மக்களும், சிறுபான்மை மக்களும், விசேடமாக சிறுபான்மை கட்சிகளும் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# திருகோணமலை மாவட்டத்தில் தொடர் மழையால் பெரும் சேதம்





திருகோணமலை மாவட்டத்தில் நேற்று பிற்பகல் 3 மணி முதல் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது.

இதன் காரணமாக திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பைசல் நகர்ப் பகுயில் வீடொன்று பெரும் சேதம் அடைந்துள்ளது

நேற்று பிற்பகல் 3.25 மணியளவில் ஏற்பட்ட கடும் மழையுடன் கூடிய பலத்த காற்றுக் காரணமாக வீட்டின் கூரை முற்றாக தூக்கி வீசப்பட்டுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் நனைந்துள்ளன.

வியாபாரப் பொருள்களும் மழை நீரால் நனைந்துள்ளன. வீட்டின் கூரைப் பகுதி காற்றுக்கு தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் சில தளபாடங்களும் வீசப்பட்டுள்ளன

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தமது வீட்டுக்கான இழப்பீடுகளை வழங்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அக் குடும்பத்தார் கோறுகின்றனர்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் 21வயது இளைஞன் சாவு

ஓட்டமாவடியில் நேற்று இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நேற்று மாலை மழை பெய்து கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் ஓட்டமாவடி பாலத்துக்கு அருகி லுள்ள புகையிரத தண்டவாளத்தில் சறுக்கி விழுந்ததில் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன் மற்றையவர் காயமடைந்து வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி – தியாவட்டவான் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பணிபுரிந்த மீறாவோடை பிரதேசத்தைச் சேர்ந்த எம்.ஜே.முபாரிஸ் வயது – 21 எனும் இளைஞனே இவ்விபத்தில் மரணமடைந்துள்ளார்.

பணிபுரியும் பெற்றோல் நிரப்பும் நிலையத்தில் இருந்து வேலை முடிந்து வீடு செல்லும் போது ஓட்டமாவடி பாலத்தின் புகையிரத கடவையினை கடக்கும் போது மோட்டார் சைக்கிள் சறுக்கியதில் இவ்விபத்து இடம் பெற்று இருக்கலாம் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது மழை காரணமாக மோட்டார் சைக்கிள் புகையிரத தண்டவாளத்தில் சறுக்கியதில் இருவரும் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் ஒருவர் மரணமடைந்தள்ளதுடன் மற்றயவர் காயமடைந்துள்ளார்.

மரணமடைந்த இளைஞனின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசிய உணவு பாதுகாப்பு மாதம் நாடளாவிய ரீதியில் நிகழ்வுகள்

தேசிய உணவுப் பாதுகாப்பு மாதத்தினை முன்னிட்டு சுகாதார அமைச்சின் வலியுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் பிரதேச சுகாதார அலுவலகம் தோறும் இடம்பெற்று வருகின்றது

அந்த வகையில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் பள்ளிவாசல் நிருவாகத்தினருக்கு நோன்பு மாதத்தினை முன்னிட்டு கொரோனா வைரஸ் பாதுகாப்பு விழிப்பூட்டல் கருத்தரங்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம் பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.நஜீப்கானின் வழிகாட்டலில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல்.எம். நஸீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.நௌபர், பொதுப் சகாதார சுகாதாரப் பரிசோதகர்களான எம்.ஏ.ஏ. நௌசாத், ஏ.அர்.எம்.ஹக்கீம் ஆகியோர் கலந்து கொண்டு நோன்பு காலத்தில் நோன்பு கஞ்சி தயாரிப்பது தொடர்பாகவும், அதனை கையாள்வது தொடர்பாகவும் விளக்கம் அளிக்கப்பட்டதுடன், நோன்பு காலத்தில் கொரோனாப் பாதுகாப்பு கருதி சுகாதார திணைக்களத்தின் விதிமுறைகளை பேணி நடந்து கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு நோன்பு காலத்தில் நோன்பு கஞ்சி தயாரிப்பது தொடர்பில் பள்ளிவாசல்களுக்கு சுகாதார பரிசோதகர்கள் வருகை தந்து பார்வையிடுவதுடன், சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பள்ளிவாயல் நிருவாகத்தினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

நோன்பு காலத்தில் பள்ளிவாயல்களுக்கு முகக் கவசம் அணிந்து வருதல், தொழுகை விரிப்பு கொண்டு வருதல், சமூக இடைவெளியை பேணுதல், தொழுகைக்கு குறைந்தோரை அனுமதித்தல், நோன்பு கஞ்சி தயாரிப்பவர்கள் சுகாதார விதிமுறைகளை பேணி நடக்க வேண்டும், பள்ளிவாசல் மற்றும் மலசல கூடங்கள் சுத்தம் பேணப்படல், பள்ளிவாசலில் கொரோனாப் பாதுகாப்பு நடைமுறைகள் பேணப்படுதல் போன்ற அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டன.

# மணி மண்டபம் அமைக்க அடிக்கல் நாட்டும் நிகழ்வு

சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தின் 11ஆம் ஆண்டு நினைவாக ஆலயத்தில் மணி மண்டபம் அமைப்பதற்காக அடிக்கல் வைத்தல் மற்றும் ஆறுமுகப் பெருமானின் கோபுர முன் வாயிலில் சரவணப் பொய்கை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுதல் நிகழ்வும் ஆலயத்தின் வன்னிமை பாலச்சந்திரன் தலைமையில் சுபவேளையில் இடம் பெற்றது.

அத்துடன் சித்திரவேலாயுத பெருமானுக்கு 108 கல சாபிஷேகமும் சண்முகப் பெருமானுக்கு 108 கல சாபிஷேகமும் இடம் பெற்றது.

கடந்த 50 வருடமாக ஆலயத்தின் நிருவாகிகளாக இருந்து சேவையாற்றியவர்கள் கௌரவிக்கப்பட்டு ஆலயத்தில் இடம்பெற்ற அடிக்கல் நடும் பூசை நிகழ்விலும் கலந்து கொண்டிருந்தனர்.

இன்றையதினம் முருகப் பெருமானுக்கு விசேடமாக பூசை இடம்பெற்று கலசபூசை மட்டும் கலசசங்காபிஷேகம் என்பன இடம்பெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் உட்பட பலரும் அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகளில் பொதுமக்கள் கலந்து கொண்டு விசேட பூசை பூசை வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் நிகழ்விலும் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் ஆலயத்தின் வன்னிமை பாலச்சந்திரனுக்கு மரபுவழியாக வந்த வன்னிமைக்குரிய முடி சூடுதல் நிகழ்வும்நேற்று இடம்பெற்றது.

# விசேட போக்குவரத்து பொலிஸாரின் திடீர் சோதனை

அம்பாறை பிராந்தியத்தில் காலை முதல் மதியம் வரை விசேட போக்குவரத்து பொலிஸாரின் திடீர் சோதனை நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

இன்று காலை முதல் மதியம் வரை இந்த திடீர் சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை புற நகரப்பகுதி, கல்முனை நகரப் பகுதி, நற்பிட்டிமுனை பிரதான சந்தி, தாளவட்டுவான் சந்தி, பாண்டிருப்பு, சவளக்கடை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

இத்திடீர் சோதனையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, குடிபோதையில் வாகனம் ஓட்டுவது தொடர்பில் கண்காணிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டு வீதி ஒழுங்கு முறை தொடர்பான ஆலோசனைகள் பொலிஸாரினால் வழுங்கப்பட்டன.

இச்சோதனை நடவடிக்கையானது அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்தரட்நாயக்க வழிகாட்டலில் இடம்பெற்றதுடன் இதன் போது அம்பாறை மாவட்ட விசேட போக்குவரத்து பொலிஸாருடன் இணைந்து கல்முனை சம்மாந்துறை சவளைக்கடை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸாரும் இணைந்து முக்கிய சந்திகள் பிரதான வீதிகளில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

குறிப்பாக இச்சோதனை நடவடிக்கையின் போது 75 பேர் மேற்கூறிய குற்றங்களுக்காக தண்டப் பணம் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதல் வெற்றியைப் பெற்றது!

ஐ.பி.எல். 2021 தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதிய எட்டாவது லீக் போட்டியில் சென்னை அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

மும்பை மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பஞ்சாப் கிங்ஸ் அணி, சென்னை அணிப் பந்துவீச்சாளர்களைச் சமாளிக்கத் திணறி, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. ஷாருக்கான் 47 ஓட்டங்களையும் ஜெய் ரிச்சர்ட்சன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தீபக் சஹார் 13 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

107 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 15.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து போட்டியில் வெற்றிபெற்றது. மொயின் அலி 46 ஓட்டங்களையும் டுபிளெஸிஸ் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பஞ்சாப் அணியின் மொஹமட் ஷமி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தீபக் சஹார் தெரிவானார்.

இந்தப் போட்டியில் பெற்ற வெற்றியோடு சென்னை அணி 2 புள்ளிகளுடன் அணிப் பட்டியலில் இறுதி இடத்திலிருந்து இரண்டாமிடத்துக்கு முன்னேறியுள்ளது.

## ஐ.பி.எல். 2021 இன்று மும்பை – ஹைதராபாத் மோதல்!

ஐ.பி.எல் 2021 தொடரின் இன்றைய போட்டியில் மும்பை இந்தியன்ஸ், சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன. சென்னையில் நடைபெறும் இப்போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

# நோர்டியாவின் தனிமைப்படுத்தல் முடிந்தது டெல்லி அணியுடன் இணைந்தார்



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அன்ரிக் நோர்டியா ஐ.பி.எல். இல் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியில் அங்கம் வகிக்கிறார். கடந்த 6 ஆம் திகதி மும்பை வந்தடைந்த அவர் ஐ.பி.எல். கொரோனா தடுப்பு வழிகாட்டுதலின்படி 7 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டார்.

சில தினங்களுக்கு முன்பு அவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டார் என தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் அந்த தகவல் தவறானது என்று தெரிவித்துள்ள டெல்லி அணி நிர்வாகம், மூன்று முறை அவருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையிலும் நோய்த் தொற்று இல்லை என்ற முடிவே வந்தது. இப்போது தனிமைப்படுத்துதலில் இருந்து விடுபட்டு அணிக்குரிய பாதுகாப்பு வளையத்திற்குள் அவர் இணைந்து விட்டதை உறுதிப் படுத்தியுள்ளது.

பரிசோதனை முடிவுகளை பெறுவதில் ஏற்பட்ட தாமதமே அவர் அணியோடு இணைவதில் தாக்கம் செலுத்தியது என தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்று பயிற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நோர்டியா, நாளை நடக்கும் பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்தில் களம் இறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ரி – 20 தொடரையும் வென்றது பாகிஸ்தான்



தென்னாபிரிக்க அணிக்கெதிரான நான்காவதும் இறுதியுமான இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரை 3 – 1 என்ற கணக்கில் பாகிஸ்தான் கைப்பற்றியுள்ளது.

செஞ்சூரியனில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணய ச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தென்னாபிரிக்க அணி, 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. வன் டெர் டஸென் 52 ஓட்டங்களையும் மலன் 33 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் ஹசன் அலி மற்றும் பஃஹீம் அஸ்ரப் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஹரிஸ் ரவூப் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

145 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 19.5 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. பஃகர் சமான் 60 ஓட்டங்களையும் மொஹமட் நவாஸ் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் பெற்றனர். தென்னாபிரிக்க அணியின் லிஸாட் வில்லியம்ஸ், சிஸாண்டா மகலா இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக பஃஹீம் அஸ்ரப்பும், தொடரின் நாயகனாக பாபர் அசாமும் தெரிவானார்கள்.

முதலில் நடைபெற்றிருந்த 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரையும் பாகிஸ்தான் அணி 2 – 1 என்ற கணக்கில் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பென் ஸ்டோக்ஸுக்கு சத்திர சிகிச்சை



பஞ்சாப்புக்கு எதிரான ஐ.பி.எல். லீக் ஆட்டத்தில் கிறிஸ் கெய்ல் அடித்த பந்தை பிடித்தபோது பென் ஸ்டோக்ஸுக்கு இடது கையில் காயம் ஏற்பட்டது.

மருத்துவப் பரிசோதனையில் அவருக்கு ஆட்காட்டி விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. இதனால் அவர் ஐ.பி.எல். தொடரில் தொடர்ந்து விளையாடுவது இயலாமற் போனது. களத்தில் விளையாட முடியா விட்டாலும் தொடர்ந்து அணியோடு தங்கியிருந்து, வீரர்களுக்கான ஆலோசனைகளையும் உத்வேகத்தையும் வழங்க விரும்புகிறார் என அவர் தெரிவித்திருந்தார்.

எனினும், ஏற்பட்டிருக்கும் எலும்பு முறிவுக்கு விரைவாக சத்திர சிகிச்சையை மேற்கொள்வது நல்லது என்ற மருத்துவர்களின் ஆலோசனைகளை ஏற்று அவர் இன்று இங்கிலாந்துக்குப் புறப்படுகிறார்.

அங்கு வருகிற 19 ஆம் திகதி அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட இருப்பதாகவும், அதன் பிறகு 12 வாரங்கள் வரை அவர் போட்டிகளில் விளையாட முடியாது ஓய்விலிருக்க வேண்டும் என்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனால் அவர் ஜூன் மாத தொடக்கத்தில் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய காலகட்டம் ஜனாதிபதி அதை உணர்ந்துகொள்ள வேண்டும்

## ஜே.வி.பி. எச்சரிக்கை

இலங்கைக்குள் சீன பிராந்தியத்தை ஸ்தாபிப்பதற்காக மக்கள் அதிகாரத்தை வழங்கவில்லை என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவும் அவர் தலைமையிலான அரசாங்கமும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கொழும்புதுறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நியமனத்துக்கான சட்ட மூலம் சர்வசன வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

கொழும்புதுறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நியமனத்துக்கான சட்ட மூலம் இலங்கையின் அரசமைப்பிற்கு முரணானதாகும். இந்த சட்டமூலம் நகர சபை சட்டம் மற்றும் முதலீட்டு சட்டம் உள்ளிட்ட 7 சட்டங்களுக்கும் அப்பாற்பட்டதாகக் காணப்படுகிறது. அத்தோடு இந்த சட்ட மூலத்துக்கு அமைய கொழும்பு துறைமுக நகரம் எந்தவொரு நகரசபைக்கோ பிரதேச சபைக்கோ உட்படாததாகவே காணப்படுகிறது. குறைந்தபட்சம் கொழும்பு மாவட்டத்துக்கு உட்பட்டதாகக் கூட இது அமையவில்லை.

நாட்டில் எந்தவொரு பகுதியானாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளே அவற்றை ஆட்சி செய்வார்கள். ஆனால் கொழும்பு துறைமுக நகரம் அமைந்துள்ள 1115 ஏக்கர் நிலப்பகுதியை ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுவையன்றி வேறு எவரும் நிர்வகிக்க முடியாது. அத்தோடு இங்கு பொருள்களைக் கொள்வனவு செய்து வெளியேறும் போது அவற்றுக்கு வரி செலுத்தப்பட வேண்டும்.

இதில் சீனாவின் 80 வீத முதலீடு காணப்படுவதால் குறித்த சீன முதலீட்டு நிறுவனத்தின் தேவைக்கு ஏற்பவும் அழுத்தத்துக்கு அமையவும் இந்த சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் இராஜதந்திர பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதே இதன் இலக்காகும். மாறாக இலங்கைக்கு இதனால் எவ்வித நன்மையும் கிடையாது.

இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டிய கால கட்டம் இதுவாகும்.

இலங்கைக்குள் சீன பிராந்தியத்தை உருவாக்குவதற்கு மக்கள் அதிகாரத்தை வழங்கவில்லை என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவர் தலைமையிலான அரசாங்கமும் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே இந்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மாத்திரமின்றி, சர்வசன வாக்கெடுப்பை நடத்தி நிறைவேற்ற வேண்டும்.

எவ்வாறிருப்பினும் நாட்டை பிரித்து அதனை ஏனைய நாடுகளுக்கு பகிரிந்தளிக்கும் உரிமை ஜனாதிபதிக்குக் கிடையாது. இது நாட்டின் சொத்து என்பதால் இது தொடர்பில் எதிர்ப்புக்களை வெளியிட மக்களுக்கு உரிமை உண்டு. எவ்வாறிருப்பினும் இந்தச் சட்ட மூலம் நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படக் கூடாது என்பதற்காகவே 5 நாள்கள் தொடர் விடுமுறை வரும் காலப்பகுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பான கருத்துக்களை வெளியிட்ட ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கே இவ்வாறான நிலைமை எனில் சாதாரண மக்களின் நிலைமை எவ்வாறிருக்கும் என்று சிந்திக்க வேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி பொறுப்பேற்றதன் பின்னர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் இவர் அல்லர் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனவே நீதிமன்றம் நாட்டின் இறையாண்மையைக் கருத்திற் கொண்டும் நாட்டின் எதிர்காலம், அரசமைப்பு மற்றும் அடிப்படை சட்டம் என்பவற்றைப் பிரதானமாகக் கொண்டு சிறந்த தீர்ப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம். - என்றார்.

## சாவகச்சேரி விபத்தில் படுகாயமடைந்தவர் சாவு

யாழ். சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் சாவளை இயற்றாலை வரணியைச் சேர்ந்த தவராசா டினேஜன் என்ற 19 வயது மதிக்கத்தக்க இளைஞனே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

தனது தோட்டத்தில் உள்ள கீரையை கடைகளுக்கு வழங்குவதற்காக ஓடர் எடுக்கச் சென்ற வேளை கடந்த 15 ஆம் திகதி சைக்கிளுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்துள்ளார்.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குறித்த இளைஞன் நேற்று மரணம் அடைந்துள்ளார். இவரது உடற்கூற்றுப் பரிசோதனையைத் தென் மராட்சி வலய திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## காணாமல் போன குழந்தை; மக்களிடம் உதவி கோரல்

நீர்கொழும்பு தலஹேனா பகுதியில் இருந்து 2 வயது 10 மாதம் நிரம்பிய ஒரு குழந்தை காணாமல் போயுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன குழந்தையைக் கண்டுபிடிக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை(என்.சி.பி.ஏ.) பொதுமக்களின் உதவியை நாடியுள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, காணாமல் போன குழந்தையின் தாய் இது தொடர்பாக தம்மிடம் முறைப்பாடு அளித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளது.

குழந்தை தொடர்பாகத் தகவல் கிடைத்தால் சிறுவர் அதிகாரசபையின் அவசர இலக்கம் 1929 அல்லது தொலைபேசி இலக்கம் 0112 778911 மூலம் தொடர்பு கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.




## இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசிக்க இந்திய மீனவர்களுக்கு அனுமதி இல்லை

### நாலக கொடஹேவா தெரிவிப்பு



இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களை அனுமதிப்பதற்கான நிலைப்பாடு அரசிடம் இல்லை என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த போது, மீனவர் பிரச்சினை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படவுள்ளனர் என்று வெளியாகிய பொய்ச் செய்திகளை பொதுமக்கள் நம்பக் கூடாது.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற நாள் முதல் இது வரை நாட்டைக் காட்டிக்கொடுக்கின்ற எந்தவொரு செயற்பாட்டையும் ஜனாதிபதி மேற்கொள்ளவில்லை.

இதனால் ஜனாதிபதி மீது பொதுமக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். அவரது ஆட்சி முறை பற்றி நம்பிக்கை வைக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## முதியோர் இல்லத்தில் இருந்து புத்தாண்டுக்கு உறவினர் வீடு சென்ற யுவதி மீது தாக்குதல்

காலி, ஏப். 17

முதியோர் இல்லத்தில் வசித்து வந்த 72 வயதான பெண்மணி, தமிழ் - சிங்கள புத்தாண்டு தினத்தன்று காலி பிட்டிகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட கொடாமுன பிரதேசத்தில் அமைந்துள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அப்போது அங்கிருந்த உறவினர் மற்றும் பேரப்பிள்ளை அவரை தாக்கியுள்ளதுடன் அவர் படுகாயமடைந்த நிலையில் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குணவதி கருணாரத்ன என்ற இந்த வயோதிப பெண்மணி அவரது தங்கையின் மகளது வீட்டுக்குச் சென்றுள்ளார். அப்போது வீட்டில் இருந்த உறவினரான மகளும் அவரது கணவர் மற்றும் பேரப்பிள்ளை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்த பிட்டிகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மஹேஷ் கருணாரத்ன பொலிஸாருடன் வீட்டுக்குச் சென்று 1990 அம்புலன்ஸ் மூலம் பெண்மணியை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

வயோதிப பெண்ணை தாக்கிய உறவினரான மகள், அவரது கணவர் உட்பட நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org